# COVID-19 நோய் இருக்கும் பிள்ளை ஒருவரைப் பராமரித்தல்

Feb 15, 2022

உங்களின் வீட்டிலுள்ள பிள்ளை ஒருவர் COVID-19 நோயினால் பாதிக்கப்பட்டிருந்தால், அவரின் அன்றாடத் தேவைகளுக்கான கவனிப்பையும் ஆதரவையும் பெற்றோரும் பராமரிப்பாளர்களும் தொடர்ந்து வழங்கவேண்டும். வளர்ந்தவர்களுடன் ஒப்பிடும்போது, பெரும்பாலான பிள்ளைகளில் COVID-19 இன் மிதமான நோய்க்குறிகளே தோன்றுகின்றன. COVID-19 உள்ள சில பிள்ளைகள் மிகவும் நோய்வாய்ப்படக்கூடும், அவர்களை மருத்துவமனைக்குக் கொண்டுசெல்ல வேண்டியிருக்கலாம் அல்லது அவர்களுக்கு மிகவும் தீவிரமான மற்றும் நீண்டகாலம் நிலைத்திருக்கும் நோய்க்குறிகள் ஏற்படலாம்.

**பின்வரும் ஏதாவதொரு நிலைமை உங்களின் பிள்ளையில் இருந்தால் மருத்துவக் கவனிப்பை நாடுங்கள்:**

- 3 மாதத்துக்கும் குறைவான வயது அத்துடன் காய்ச்சல் அல்லது சுவாசிப்பதில் சிரமம்
- விழிக்கிறார் இல்லை
- 7 நாட்களுக்கும் மேலாக நிலைத்திருக்கும் காய்ச்சல்
- சொறி (rash) உடன் கூடிய காய்ச்சல்
- நீலநிறத் தோல்
- தொடர்ந்து வாந்தி அல்லது வயிற்றோட்டம்
- போதுமான திரவம் குடிப்பதில்லை
- நோய்த்தடுப்புச் சக்தி குறைவானவர் அத்துடன் காய்ச்சல் இருக்கிறது

**பின்வரும் முறைகளில் COVID-19 இன் மேலதிக பரவலைத் தடுங்கள்:**

- வீட்டுக்குள் நன்கு பொருந்தியிருக்கும் முகக்கவசம் ஒன்றை அணிந்திருத்தல்;
- பாத்திரங்கள், கரண்டிகள்/முள்ளுக்கரண்டிகள், மேற்பரப்புக்கள், தண்ணீர்க்குழாய்கள், கதவுக் கைப்பிடிகள் மற்றும் கழிப்பறைக் கைப்பிடிகள் போன்ற அதிகம் தொடுகைக்குள்ளாகும் பொருட்களைக் கிருமிநீக்கம் செய்தல்;
- COVID-19 ஆல் மிகவும் நோய்வாய்ப்படுவதற்கான ஆபத்துக்கள் அதிகமாகவுள்ள குடும்ப நபர்களை முடிந்தவரை தனிமைப்படுத்தல்;
- உங்களின் பிள்ளையின் படுக்கையில் தூங்காமல் இருத்தல்;
- சவர்க்காரம் மற்றும் நீரினால் கைகளைக் கழுவுதல்;
- முடிந்தவரை, வீட்டிலிருக்கும் ஏனையவர்களிடமிருந்து ஆறு அடி/இரண்டு மீற்றர் இடைவெளியில் இருத்தல்
- பாதுகாப்பானதாக இருப்பின், ஜன்னல்களைத் திறப்பதன் மூலம் காற்றோட்டத்தை அதிகரித்தல்;
- வீட்டிலிருக்கும் அங்கத்தவர்கள் அனைவரும் அதே தனிமைப்படுத்தல் காலம்வரைக்கும் வீட்டில் இருத்தல்.

எங்களின் பிள்ளைகள் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்கு உதவுவதுதான், COVID-19 இலிருந்து எங்களின் பிள்ளைகள், குடும்பத்தவர்கள் மற்றும் சமூகத்தினரைப் பாதுகாப்பதற்கு நாங்கள் இப்போது செய்யக்கூடிய மிக முக்கியமான விடயமாகும்.